| | | |
|---|---|---|
| சாட்சி : PW விஜயலெட்சுமி | IA.3/23 in OS.386/11 | 13.12.2023 |

**PW1– சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எந்த தேதி மாத வருடத்தில் இருந்து எந்த தேதி மாத வருடம் வரை எனது கணவருக்கு என்ன நோய் என்பதை மனுவின் பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லாததற்கு காரணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். 02.12.2019 ல் கொரானா முடக்கம் எதுவும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. 2020 மா ர்ச் மாதம் தான் ஊரடங்கு அறிவிக்கப்பட்டது என்றும், 02.12.2019 அன்று அவ்வாறு எதுவும் இல்லை என்றால் எனக்கும் உடல்நிலை சரியில்லாமல் தான் நாங்கள் இருவரும் இருந்தோம். பொது ஊரடங்கானது மார்ச் 2022 ம் ஆண்டு விலக்கி கொள்ளப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. 02.12.2019 ல் நீதிமன்றத்திற்கு வராததால் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் அன்றைய தினமே எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு நிலுவையில் இருக்கும் போது பி அட்டவணை சொத்தை மோகனுக்கும், அகிலாண்டேஸ்வரிக்கும் போலி கிரையம் செய்து கொடுத்தேனா என்றால் சரியல்ல. மோகனும், அகிலாண்டேஸ்வரியும் சொத்தை வாங்கி விட்டதால் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க சொல்லி மனு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது. மோகனும், அகிலாண்டேஸ்வரியும் தரப்பினராக சேர்க்க வேண்டிய மனு தள்ளுபடியான விபரம் தெரிந்து வாதிக்கு ஒருதலைபட்ச தீர்ப்பு ஏற்பட்டுவிட கூடாது என்றா கெட்ட எண்ணத்தில் 2 ஆண்டுகள் 11 மாதங்கள் காலதாமதமாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பத்மாநாபன் மனைவி சகுந்தலா, கிருஷ்ணமூர்த்தி மனைவி மேகலா அவர்களிடம்

கிரையம் பேசியதற்கு அட்வான்ஸ் எதுவும் வாங்கவில்லை. சார்பதிவாளரிடம் எதிர்மனுதாரர் பரிமளா தடங்கல் மனு தாக்கல் செய்து சார்பதிவாளர் உத்தரவி பிறப்பித்தற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை. 17.05.2022 ல் சார்பதிவாளர் பிறப்பித்த உத்தரவு எனக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டதா அல்லது நேரில் வழங்கக்கப்பட்டதா என்றால் என்கு உத்தரவு வழங்கப்படவே இல்லை. 17.05.2022 ல் சார்பதிவாளர் உத்தரவு பிறப்பித்து எனக்கு வழங்கியுள்ளார் என்றும் அது தெரிந்தும் வேண்டுமென்றே பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 17.05.2022 உத்தரவிற்கு முன்பாக தடங்கல் மனு எண்.16/2016 ல் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 3 முறை விசாரணைக்கு சென்றேன். **மேற்படி தடங்கல் மனு எண்.16/2016 ன் சார்பதிவாளர் பிறப்பித்த உத்தரவு எ.ம.சா.ஆ.1 ஆக மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.** சார்பதிவாளர் அலுவலகத்தில் விசாரணையின் போது பத்திர எழுத்தரை வைத்து தான் பதில் தாக்கல் செய்தேன். சார்பதிவாளர் அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராகும் போது வழககில் ஒருதலைபட்சமான விபரம் எனக்கு தெரியும் என்றும் ஆனால் உரிய காலத்தில் ஒருதலைபட்ச ரத்து மனுவை தாக்கல் செய்யாமல் சுத்தமற்ற கரத்துடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் வீட்டில் வைத்து தான் இறந்தார். எனது கணவருக்கு இயற்கையாக தான் மரணம் அடைந்தார் என்றும் அவர் நோய்வாய் படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய்யா வாக்குமூலத்துடன் மனுவை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்ததக்கதல்ல என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.